செ. கு. எண்: 253 நாள் :20.09.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கோதநல்லூர் கிராமம், வெளிந்தரவிளை பகுதியைச் சேர்ந்த திரு. ஏசுரத்தினம் என்பவரின் மனைவி திருமதி சாந்திபாய் 3.8.2013 அன்று தக்கலை பேருந்து நிலையத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், சாத்தமங்கலம் உள் வட்டம், விளாங்குடி கிராமம், மதுரை – திண்டுக்கல் பிரதான சாலையில் 9.8.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திரு. அருண்பாண்டியன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், மறவன்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வராஜ் என்பவர் 9.8.2013 அன்று திருமங்கலம் நகர பேருந்து நிலையத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 10.8.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், புள்ளம்பாடி பகுதி நஞ்சை சங்கேந்தி கிராமம் அருகே 10.8.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திரு. பாலகுமார் என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, சூளையைச் சேர்ந்த திரு. ஜான்சன் என்பவர் 16.8.2013 அன்று அரசு பொது மருத்துவமனை அருகே பேருந்துக்காக நின்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், துவரங்குறிச்சி கிராமம், மதுரை – திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலையில் 16.8.2013 அன்று நின்று கொண்டிருந்த லாரி மீது அரசுப் பேருந்து மோதியதில், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பேருந்து நடத்துநர் திரு. ராஜலோச்சன் தம்பி என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், தேங்கல்பாளையம் கிராமம் அருகே 20.8.2013 அன்று லாரி மீது அரசுப் பேருந்து மோதியதில், பேருந்தில் பயணம் செய்த நாகப்பட்டினம்

மாவட்டம், திருசோலை கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவபுண்ணியம் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சிவகிரி உள்வட்டம், காகம் கிராமம் அருகே 20.8.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த எழுமாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கௌரி சங்கர் என்பவர் பலத்த காயமடைந்து மருத்துமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், பாண்டியம்பாக்கம் கிராமம் அருகே 19.8.2013 அன்று ஆட்டோ ரிக்ஷா மீது அரசுப் பேருந்து மோதியதில் ஆட்டோ ரிக்ஷாவில் பயணம் செய்த ஆரணி வட்டம், பனையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கடப்பாய் என்பவரின் மனைவி திருமதி தனம்மாள், திரு. கிருஷ்ணன் என்பவரின் மனைவி திருமதி புஷ்பா, திரு. நடராஜ் என்பவரின் மகள் செல்வி பப்பிதா மற்றும் ஆட்டோ ஓட்டுநர் திரு. பிரகாஷ் ஆகிய நான்கு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9